# தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

Contact No: 0758190436
**PREPARED BY N.MOHANAKANTH**
BSc(Phy) EUSL, PGDE, MSc (Inno Tech) UEL London

Advance level
2020 Batch

## கணினி

01. எத்தனையாம் தலைமுறை கணினிகளில் ஒருங்கிணை சுற்றமைப்பு (Integrated Circuits) பயன்பட்டது?
   (1) முதலாம் தலைமுறை. (2) இரண்டாம் தலைமுறை. (3) மூன்றாம் தலைமுறை.
   (4) நான்காம் தலைமுறை. (5) ஐந்தாம் தலைமுறை.

02. கணினியின் தலைமுறை பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
   (A) முதாலம் தலைமுறைக் கணினியில் திரிதடையம் பயன்படுத்தப்பட்டது.
   (B) இரண்டாம் தலைமுறைக் கணினிகளுக்கு A.C தேவைப்பட்டது.
   (C) மூன்றாம் தலைமுறைக் கணினிக்கு IC பயன்படுத்தப்பட்டது.
   (D) நான்காம் தலைமுறைக் கணினிக்கு ULSI தொழினுட்பம் பயன்படுத்தப்பட்டது.
   மேலே கூறப்பட்ட கூற்றுக்களில் உண்மையானது எது / எவை?
   (1) A, B (2) B, C (3) D (4) A, B, C (5) B, D

03. பின்வருவனவற்றில் திரிதடயம் ( Transistor) பயன்படுத்தப்பட்ட தலைமுறை யாது?
   (1) முதலாம் தலைமுறை. (2) இரண்டாம் தலைமுறை. (3) மூன்றாம் தலைமுறை.
   (4) நான்காம் தலைமுறை. (5) ஐந்தாம் தலைமுறை.

04. பின்வருவனவற்றில் உள்ளீட்டுச் சாதனம் அல்லாதது?
   (1) விசைப்பலகை (Keyboard) (2) சுட்டி (Mouse) (3) இயங்குபிடி (Joy Stick)
   (4) ஒளிப்பேனா (Light pen) (5) அச்சு இயந்திரம் (Printer)

05. ஒரு கணினி முறைமையின் பின்வரும் கருவிகளைக் கருதுக.
   (A) விசைப் பலகை (B) CRT காட்சித்திரை (C) DVD செலுத்தி (D) Pen drive
   மேலுள்ளவற்றில் எவை உள்ளீடு மற்றும் வருவிளைவு ஆகிய இரு கருவிகளாகவும் உள்ளன?
   (1) (A), (B) ஆகியன மாத்திரம் (2) (A), (C) ஆகியன மாத்திரம்
   (3) (B), (C) ஆகியன மாத்திரம் (4) (B), (D) ஆகியன மாத்திரம்
   (5) (C), (D) ஆகியன மாத்திரம் (Aug 2017)

06. கணினி முறைமையில் பின்வருவனவற்றில் எது ஓர் ஒளியியல் சேமிப்புக் கருவி (Optical Storage Device)? (Aug 2017)
   (1) வன்தட்டு (Hard Disk) (2) ROM (3) RAM (4) CD ROM (5) USB

07. பின்வருவனவற்றில் வெளியீட்டுச் சாதனம் அல்லாதது எது?
   (1) Projector (2) Speaker (3) Bar Code Reader (4) Sound Card (5) Monitors

08. பின்வருவனவற்றில் எந்த நினைவகம் குறித்த கணினிச் செய்பணிக்கு அடிக்கடி பயன்படுகிறது?
   (1) Hard Disk (2) RAM (3) CD ROM
   (4) External Hard Drive (5) Flash Disk

09. ஒரு கணினியைக் கொள்வனவு செய்யும் போது கருதப்பட வேண்டிய **அவசியமற்ற** காரணி பின்வருவனவற்றுள் எது?
(1) வன்வட்டுக் கொள்ளளவு. (Hard disk capacity)
(2) எழுமாற்றுப் பெறுவழி நினைவகம். (RAM)
(3) முறைவழியாக்கியின் வகையும் வேகமும். (Processor type and speed)
(4) அச்சுப்பொறியின் வகை. (Printer type)
(5) USB வாயில்களின் எண்ணிக்கை. (Number of USB ports) (Aug 2018)

10. எந்த தொழினுட்பம் CD ROM இல் பயன்படுத்தப்படுகிறது?
(1) Mechanical (2) Electromechanical (3) Optical
(4) Fiber Optical (5) மேற்கூறிய யாவும்

11. ROM இல் சேமிக்கப்படும் செய்நிரல் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) Hardware (2) Firmware (3) Software (4) File (5) Folder

12. $10^{12}$ bytes சேமிப்பு நினைவகத்தின் அலகு பின்வருவனவற்றில் எது?
(1) Kilobyte (2) Megabyte (3) Terabyte (4) Gigabyte (5) Petabyte

13. பல்தேர்வு வினாத்தாள்களின் விடைத்தாள்களை திருத்துவதற்கு (MCQ Answer Sheets) பயன்படும் சாதனம் யாது?
(1) Graphic Tablet (2) Magnetic Ink Card Reader (MICR)
(3) Optical Character Reader (OCR) (4) Optical Mark Reader (5)Bar Code Reader

14. பின்வருவனவற்றில் ஒருவரின் உயிரியல் அடையாளங்களை மட்டும் கணினிக்கு உள்ளீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் உள்ளீட்டுச் சாதனம் எது?
(1) Iris Scanner, MICR (2) Finger Print Scanner, OCR (3) MICR, OCR
(4) Iris Scanner, Finger Print Scanner (5) MICR, Finger print Scanner

15. பின்வருவனவற்றில் அதிகூடிய வேகம் கொண்ட நினைவகம் எது?
(1) பதுங்கு நினைவகம் (2) வன்தட்டு (3) RAM
(4) ROM (5) Flash Disk

16. கணினித் திரைகள் (computer monitors) தொடர்பாக பின்வரும் எந்தக் கூற்று சரியானது?
(1) LCD மற்றும் LED திரைகள் தட்டைப் பனல்கள் என அறியப்படுகின்றன.
(2) LED திரைகள் கணினியில் பயன்படுத்தப்படுவதில்லை.
(3) LCD திரைகள் கணினியில் பயன்படுத்தப்படுவதில்லை.
(4) LCD,CRT திரைகள் தட்டைப் பனல்கள் என அழைக்கப்படுகின்றன.
(5) CRT திரைகளில் விம்பங்களின் தரம் LED திரைசளை விட அதிகமானது. (Aug 2019)

17. காசோலையில் உள்ள வங்கியின் குறியீட்டு இலக்கம், காசோலை இலக்கங்களை உட்புகுத்துவதற்கு பயன்படுத்தப்படும் ஒரு உள்ளீட்டுச் சாதனம் எது?
(1) Graphic Tablet (2) Magnetic Ink Card Reader (MICR)
(3) Optical Character Reader (OCR) (4) Optical Mark Reader (5) Bar Code Reader

18. அச்சிடப்பட்ட ஆவணைத்தில் உள்ளவற்றை ஒவ்வொரு எழுத்துக்களாக கணினிக்கு வழங்கக் கூடிய ஒரு உள்ளீட்டுச் சாதனம் எது?
(1) Graphic Tablet (2) Magnetic Ink Card Reader (MICR)
(3) Optical Character Reader (OCR) (4) Optical Mark Reader (5) Bar Code Reader

19. படங்கள் வரைவதற்கும் கையொப்பங்கள் இடுவதற்கும் பயன்படுத்தப்படும் உள்ளீட்டுச்சாதனம் பின்வருவனவற்றில் எது?
(1) Graphic Tablet (2) Magnetic Ink Card Reader (MICR)
(3) Optical Character Reader (OCR) (4) Optical Mark Reader (5) Bar Code Reader

20. பின்வருவனவற்றில் விசைப்பலகையில் காணப்படும் விசேட தேவைக்கான சாவிகள் வகைக்குள் காணப்படும் சாவி எது?
(1) Insert Key (2) Num Lock Key (3) Control Key
(4) Escape Key (5) Delete Key

21. தரப்பட்ட அலகுகளில், கணினியின் தேக்க கொள்ளளவை (storage capacity) அளவிடப் பயன்படும் மிகப்பொரிய அலகு யாது? (Aug 2019)
(1) Gigabyte(GB) (2) Terabyte(TB) (3) Kilobyte(kB)
(4) Megabyte (MB) (5) Byte(B)

22. பின்வருவனவற்றில் கட்டுப்பாட்டுத் தொகுதியின் (Control Unit) செயற்பாடு பற்றிய கூற்றுக்களில் பிழையானது எது?
(1) கணினியின் ஏனய பாகங்களுக்கு தரவு (Data ), வழங்கப்பட்ட தகவல் (Instructions ) பரிமாற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு பொறுப்பாக இருக்கும்.
(2) கணினியின் எல்லாப் பகுதியையும் நிர்வகித்து (Manage) ஒருங்கிணைத்தல் (Coordinate ).
(3) நினைவகத்தில் இருந்து வழங்கப்பட்ட தகவல்களை(Instructions ) பெற்று அதன் உட்பொருளை வெளிப்படுத்தி (Interpret ) நேரடியாக கணினியை இயக்குதல்.
(4) சேமிப்பகத்திலிருந்து (Storage ) தரவுகள் ( Data ) அல்லது முடிவுகளை (Results ) பரிமாற்றுவதற்கு உள்ளீடு (Input) அல்லது வருவிளைவு (Output ) இடையே தொடர்புகளை வைத்திருக்கும்.
(5) தகவல்களை சேமித்து செயல்முறைக்குள்ளாக்குதல்.

23. கணினியின் நினைவகம் பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
(A) கணினியின் நினைவகமானது எழுமாற்றுப் பெறுவழி நினைவகம் (RAM) , வாசிப்பு மட்டும் நினைவகம் (ROM), பதுக்கு நினைவகம் (Cache memory) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
(B) பதுக்கு நினைவகம், எழுமாற்றுப் பெறுவழி நினைவகம் ஆகியன அழிவுறா நினைவகங்கள் (non-volatile memory devices) ஆகும்.
(C) PROM எனப்படுவது Programmable Read only Memory (செய்நிரற்படத்தகு வாசிப்பு மட்டும் நினைவகம்) ஆகும்.
மேலுள்ள கூற்றுகளில் சரியானது / சரியானவை,
(1) (A) மாத்திரம் (2) (B) மாத்திரம் (3) (C) மாத்திரம்
(4) (A), (B) ஆகியன மாத்திரம் (5) (A), (C) ஆகியன மாத்திரம் (Aug 2018)

24. கீழே தரப்பட்டுள்ள உள்ளீடு – வெளியீடு (input-output) உத்திகளை கவனத்திற் கொள்க.
(A) சுட்டி (Mouse) (B) எண் சாவிப்பலகை (Numeric Key pad)
(C) காட்சித்திரை (Display Panel) (D) அச்சுப்பொறி (Printer) (E) வரைவி (Plotter)

மேற்குறித்த உத்திகளுள் வங்கியொன்றின் தன்னியக்க சொல்லி இயக்கத்தில் (ATM) அடங்கியுள்ள உத்திகள் எவை?

(1) (A), (B) மாத்திரம் (2) (B), (D) மாத்திரம் (3) (A), (C) மாத்திரம்
(4) (B), (C), (D) ஆகியன மாத்திரம் (5) (A), (C), (E) ஆகியன மாத்திரம்

25. பின்வருவனவற்றில் எது ஒரு கணினியின் வன்பொருள் அன்று?
(1) CPU (2) சாவிப்பலகை (Keyboard) (3) பணிசெயல் முறை (Operating system)
(4) தாய்ப்பலகை (Motherboard) (5) சுட்டி (Mouse) (Aug 2015)

26. பின்வரும் கணினிச் சாதனங்களைக் கருதுக.
(A) சுட்டி (Mouse) (B) அச்சுப் பொறி (Printer)
(C) சாவிப்பலகை (Keyboard) (D) USB பளிச்சீட்டுச் செலுத்தி (USB flash drive)

மேற்குறித்த சாதனங்கள் தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களில் எது உண்மையானது?
(1) (A) மாத்திரம் ஓர் உள்ளீட்டுச் சாதனம் ஆகும்.
(2) (B) மாத்திரம் ஓர் உள்ளீட்டு/வெளியீட்டுச் சாதனம் ஆகும்.
(3) (A),(B) ஆகியன மாத்திரம் உள்ளீட்டுச் சாதனங்கள் ஆகும்.
(4) (B),(C) ஆகியன மாத்திரம் வெளியீட்டுச் சாதனங்கள் ஆகும்.
(5) (D) மாத்திரம் உள்ளீட்டு/வெளியீட்டுச் சாதனம் ஆகும். (Aug 2015)

27. வரையப் பயனர் இடைமுகம் (Graphical user interface – GUI) வடிவமைத்தலில் WIMP எனும் சுருக்கச் சொல் குறிப்பது
(1) Windows, Interactions, Mails, Pointer (சாளரங்கள், ஊடாட்டங்கள், அஞ்சல்கள், காட்டி)
(2) Windows, Icons, Menu, Pointer (சாளரங்கள், படவுருக்கள், பட்டியல், காட்டி)
(3) Web, Icons, Mails, Programmes (வலை, படவுருக்கள், அஞ்சல்கள், செய்நிரல்கள்)
(4) Web, Interactions, Menu, Programmes (வலை, ஊடாட்டங்கள், பட்டியல், செய்நிரல்கள்)
(5) Web, Icons, Mails, Pointer (வலை, படவுருக்கள், அஞ்சல்கள், காட்டி)
(Aug 2018)

28. பின்வரும் RAM பற்றிய கூற்றுக்களைக் கருதுக.
(A) மின்சாரம் துண்டிக்கப்பட்டால் இது தரவை இழந்துவிடும்.
(B) இது கணினியின் நினைவகமாகத் தொழிற்படும்.
(C) இரண்டாம் நினைவகத்தை விட வேகமானது.
(D) இவ் நினைவகம் இல்லாமலும் கணினியை இயக்க முடியும்.
மேலே கூறப்பட்ட கூற்றுக்களில் உண்மையானது எது / எவை?
(1) A, B (2) B, C, D (3) D (4) A, B, C (5) B, D

29. பின்வரும் கூற்றுகளைக் கருதுக?
(A) எழுமாற்றுப் பெறுவழி நினைவகத்தின் (RAM) அழியாத்தன்மை (non-volatility) பிரயோக மென்பொருட்களைத் தேக்குவதற்குப் பயன்படுகிறது.
(B) பயனர் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளைச் செய்ய பணிசெயல் முறைமையின் பல்பணிச்செயல் பண்புக்கூறு (multitasking feature) அனுமதிக்கிறது.
(C) அறுதியிடு மென்பொருட்களைப் (diagnostic software) பயன்படுத்தி வன்பொருள் கருவிகளின் பிரச்சினைகளைக் கண்டறியலாம்.

மேலுள்ளவற்றில் சரியான கூற்று/கூற்றுகள்,
(1) (B) மாத்திரம். (2) (A),(B) ஆகியன மாத்திரம். (3) (A),(C) ஆகியன மாத்திரம்.
(4) (B),(C) ஆகியன மாத்திரம். (5) (A),(B),(C) ஆகிய எல்லாம். (Aug 2019)

30. பின்வருவனவற்றில் வன்தட்டு பற்றிய பிழையான கூற்று எது?
(1) இது காப்பு நினைவகமாகவும் (Backup Memory) தொழிற்படும்.
(2) நிதந்தரமாக தரவுகளை பதிவுசெய்யக் கூடியது.
(3) மின் துண்டிக்கப்பட்டால் கூட தரவுகளை இழக்காது.
(4) கணினியின் தரவுகளை சேமித்து வைக்கக் கூடியது.
(5) பதுங்கு நினைவகத்தை விட வேகம் கூடியதாகக் காணப்படும்.

31. வாசிப்பு மட்டும் நினைவகம் (Read only Memory) பற்றிய கூற்றைக் கருதுக.
    (A) இதில் புதிதாக தரவுகளைச் சேர்க்க முடியாது.
    (B) இதில் உள்ள தரவுகளை அழிக்க முடியாது.
    (C) கணினியில் தரவுகளை சேமிக்கும் போது மட்டும் பயன்படுத்தப்படும்.
    (D) இவ் நினைவகம் கணினியில் மட்டும் பயன்படுத்தப்படும்.

    மேலே உள்ள கூற்றுக்களில் உண்மையானது எது / எவை?
    (1) A, B (2) B, C (3) D (4) A, B, C (5) B, D

32. பின்வருவனவற்றில் USB Port இணைக்க முடியாத சாதனம் எது?
    (1) Mouse (2) Keyboard (3) Printer (4) Monitor (5) Scanner

33. நீண்ட கட்டுரையொன்றினைக் கணினித்திரையில் அங்குமிங்கும் அசைத்துப் பார்ப்பதற்காகப் பயன்படுத்தப்படுவது பின்வருவனவற்றுள் எது?
    (1) பொருள் தலைப்புப் பட்டை (Tittle Bar) (2) பட்டிப்பட்டை (Menu Bar)
    (3) சுருள் பட்டை (Scroll Bar) (4) நிலைமைப் பட்டை (Status Bar) (5) வரைகோல் (Ruler)

34. பின்வருவனவற்றில் பட்டைக் குறியீடுகளை கணினிக்கு உட்புகுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் சாதனம் எது?
    (1) Graphic Tablet (2) Magnetic Ink Card Reader (MICR)
    (3) Optical Character Reader (OCR) (4) Optical Mark Reader
    (5) Bar Code Reader

35. கணினியில் உள்ளீட்டாகவும் (Input), வெளியிடாகவும் (Output) தொழிற்படும் சாதனம் எது?
    (1) சுட்டி (Mouse) (2) ஒலிவாங்கி (Microphone) (3) ஒலிபெருக்கி (speaker)
    (4) தெடு திரை (Touch Screen) (5) பட்டைக் குறிமுறை வாசிப்பான்(Bar code Reader)

36. பின்வருவனவற்றின் சரியான கூற்று யாவை அல்லது யாது?
    (A) PS/2 Port அல்லது USB Port இல்லாத கணினிக்கு எந்த வகையான Mouse யும் தொடுக்க முடியாது.
    (B) கணினிகளுக்கு CD ROM இல்லாவிட்டாலும் Operating System ஐப் புகுத்த (Install) முடியும்.
    (C) கணினிக்கு Ethernet Port இல்லாவிட்டால் கணினிகளுக்கிடையிலான வலையமைப்பை ஏற்படுத்த முடியாது.
    (D) கணினிகளில் RAM இல்லாவிட்டாலும் அவற்றை இயங்கச்செய்ய முடியும்.
    (1) A,B (2) A,B (3) D (4) A,B,C (5) B

37. கணினிகளில் பயன்படுத்தப்படும் பின்வரும் தேக்க/நினைவகச் (storage/memory devices) கருதுக.

    (A) RAM (B) ROM (C) வன்வட்டு (Hard disk)
    மேற்குறித்தவற்றில் எது/எவை அழிதகு (volatile) தேக்க/நினைவகச் சாதனம் (சாதனங்கள்) ஆகும்?
    (1) (A) மாத்திரம் (2) (B) மாத்திரம் (3) (C) மாத்திரம்
    (4) (A), (B) ஆகியன மாத்திரம் (5) (B),(C) ஆகியன மாத்திரம் (Aug 2016)

38. பின்வரும் கணினிச் சாதனங்களில் எது ஓர் உள்ளீட்டுச் சாதனமாக மட்டும் தொழிற்படும்?
    (1) வன்வட்டு (2) USB பளிச்சீட்டுச் செலுத்தி (USB flash drive)
    (3) தெரிவிப்பி (monitor) (4) சாவிப்பலகை (Keyboard)
    (5) அச்சுப்பொறி (Printer) (Aug 2016)

39. பின்வரும் தொழில்களில் எது ஒரு கணினியின் வகைமாதிரியான பணிசெயல் முறைமையினால் தரப்படுவதில்லை?
    (1) முகாமைப் பயனர்கள்
    (2) முகாமைக் கோப்புகள்
    (3) உடன்நிகழ் பிரயோகங்களிடையே ஊீரு நேரத்தைப் பகிர்தல்
    (4) பயனர்களுக்கு இடைமுகங்களை வழங்குதல்
    (5) நச்சு நிரல்களிலிருந்து கணினியைப் பாதுகாத்தல். (Aug 2016)

40. கணினி வைரசுக்கள் தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக. (Aug 2019)
    (A) கணினிகள் வலையமைப்புகளுடன் (networks) இணைக்கப்படாத போது வைரசுக்கனின் தொற்றுகைக்கு உட்படாது.
    (B) வைரசுக்களில் இருந்து கணினிகளைப் பாதுகாக்க வைரசுக் காப்பானை இற்றைப்படுத்துவது முக்கியமானது.
    (C) கணினி வைரசுக்கள் பணிசெயல் முறைமையிலும் பிரயோக செய்நிரல்களிலும் பொதுவாக மறைந்திருக்கும்.

    மேலுள்ளவற்றில் சரியான கூற்று/கூற்றுகள்
    (1) (A) மாத்திரம் (2) (A),(B) ஆகியன மாத்திரம் (3) (A),(C) ஆகியன மாத்திரம்
    (4) (B),(C) அகியன மாத்திரம் (5) (A),(B),(C) ஆகிய எல்லாம்.

41. பின்வருவனவற்றுள் எந்த file system windows க்கு Support செய்யும்.
    (1) NTFS (2) BSD (3) EXT (4) HFS (5) மேலுள்ள அனைத்தும்.

42. பின்வருவனவற்றுள் எது Operating System க்கு உதாரணம் அல்லாதது?
    (1) Windows (2) Linux (3) Macintosh (4) Chrome (5) Dreamweaver CS5

43. பின்வருனவற்றில் எது ஒரு கணினியினது பணிச்செயல் முறைமையின் (Operating System) பிரதான செயற்பாடு?
    (1) வைரசுகளிடம் இருந்து கணினியைப் பாதுகாத்தல்
    (2) ஒரு வலைமேலோடியை (web browser) வழங்குதல்
    (3) அதனது RAM இன் முகாமைத்துவம்
    (4) குறைந்தது ஒரு சொல் முறைவழிப்படுத்தல் (word processing) மென்பொருளை வழங்கல்
    (5) குறைந்தது ஓர் இணைய இணைப்பை வழங்கல். (Aug 2017)

44. பின்வரும் கணினி மென்பொருள்களைக் கருதுக.
    (A) Ms Excel (B) Windows 7 (C) Netscape (D) Linux

    மேற்குறித்த மென்பொருள்களுள் செய்பணித் தொகுதிகள் (Operating System) எவை?
    (1) (A), (B) மாத்திரம் (2) (B), (C) மாத்திரம் (3) (A), (C) மாத்திரம்
    (4) (B), (D) ஆகியன மாத்திரம் (5) (A),(D) ஆகியன மாத்திரம்

45. கணினிகளின் பணிச்செயல் முறைமைகள் (OS) பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
    (A) பணிசெயல் முறைமையின் பிரதான தொழில் கணினியை நச்சுநிரல்களிலிருந்து (Virus) பாதுகாத்தலாகும்.
    (B) 'Internet Explorer' என்பது ஒரு கணினிப் பணிசெயல் முறைமையாகும்.
    (C) ஒரு குறித்த பணிசெயல் முறைமை மீது நிறைவேற்றத்தக்க ஒரு நிறைவேற்றத்தகு மென்பொருளை எவ்விதமாற்றமுமின்றி எந்தவொரு பணிசெயல் முறைமையிலிருந்தும் நகல்செய்து (copy) நிறைவேற்றலாம்.

(D) ஒரு தனிக் கணினியில் பல்பணிசெயல் முறைமைகளைத் தாபிக்கலாம்.
மேற்குறித்த கூற்றுக்களில் உண்மையானது / உண்மையானவை
(1) (A) மாத்திரம் (2) (B) மாத்திரம் (3) (c) மாத்திரம்
(4) (D) மாத்திரம் (5) (A),(D) ஆகியன மாத்திரம் (Aug 2015)

46. Windows Operating System இல் Task Manager ஐ பெறுவதற்கு பயன்படுத்த வேண்டிய சாவி யாது?
(1) Ctrl+ Alt+ Del (2) Ctrl + Alt + C (3) Ctrl + Del + C
(4) Ctrl + Del+ B (5) Ctrl + Shift + C

47. பின்வருவனவற்றில் Operating System அல்லாதது யாது?
(1) Windows Explore (2) Linux OS (3) Macintosh OS (4) Chrome OS (5) Solo OS

48. Windows இல் அண்மையில் அழிக்கப்பட்ட file கள் எல்லாம் எங்கு இருக்கும்?
(1) Recycle bin (2) Desktop (3) Taskbar
(4) My computer (5) My Document

49. Windows இல் புதிய font ஐ install செய்யும் முறை பின்வருவனவற்றில் எது?
(1) Start -> setting -> control panel -> font
(2) Start -> setting -> control panel -> font -> install new font
(3) Start -> control panel -> font -> install new font
(4) Start -> setting -> font
(5) மேலே கூறப்பட்ட அனைத்து முறைகளிலும் install செய்யலாம்.

50. பின்வருவனவற்றில் எது கணினியின் பணிசெயல் முறைமை (Operating system) அல்லாதது?
(1) வின்டோஸ் (Windows) (2) லினக்ஸ் (Linux) (3) மக்கின்டொச் (Macintosh)
(4) எம்.எஸ்.வேட் (MS Word) (5) டோஸ் (DOS)

51. பின்வருவனவற்றில் Multitasking Operating System அல்லாதது?

(1) DOS (2) Windows (3) Unix (4) Linux (5) MAC OS

52. MS word இல் பின்வரும் எந்த Menu இருந்து Header and Footer ஐப் பெற்றுக்கொள்ள முடியும்?

(1) Edit Menu (2) Insert Menu (3) View Menu (4) Format menu (5) Tools Menu

53. எந்த சாவி (key) பெரிய எழுத்துக்களாக (ALL CAPITAL LETTERS) type செய்வதற்கு பயன்படுகிறது?
(1) Control (Ctrl) (2) Insert (3) Caps Lock (4) Shift + F5 (5) F2

54. சொல் முறைவழிப்படுத்தலின் Portrait அல்லது Landscape குறிப்பது பக்கத்தின்………….

(1) திசையமைவை (Orientation) (2) அளவினை (size) (3) உருவரைமை (layout)
(4) ஓரங்களை (margins) (5) எழுத்துரு வகையை (font type) (Aug 2017)

55. செல் முறைவழிப்படுத்தல் மென்பொருள்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள பின்வரும் வசதிகளைக் கருதுக.
(A) பாடங்களின் (text) எழுத்துரவை Font Styles மாற்றுதல்.
(B) பாடங்களை (text) வெவ்வேறு விதத்தில் நேர்வரிசைப்படுத்தல். (Align)
(C) வெவ்வேறு கணிதச் செய்கைகளைப் பயன்படுத்தி தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்.

(D) பாட அசைவூட்டங்களை Animations புகுத்துதல்.
மேற்குறித்த வசதிகளுள் சொல்னிரைப்படுத்தல் மென் பொருளொன்றில் பொதுவாக காணப்படாதவை
(1) (A), (B) மாத்திரம் (2) (C), (D) மாத்திரம் (3) (A), (C) மாத்திரம்
(4) (B), (D) மாத்திரம் (5) (A), (D) மாத்திரம்

56. சொல் முறைவழிப்படுத்தலில் Mail Merge பின்வருவனவற்றில் எதற்கானப் பயன்படுத்தப்படுகிறது?
(1) இரண்டு கோப்புகளை ஒன்றாக இணைப்பதற்கு.
(2) இரண்டு ஆவணங்களை ஒன்றாக இணைப்பதற்கு.
(3) வெவ்வேறு பட்ட புலங்களுடன் கோப்பின் பல பிரதிகளை உருவாக்குவதற்கு.
(4) இரண்டு கலங்களை இணைப்பதற்கு
(5) இரண்டு பந்திகளை இணைப்பதற்கு.

57. MS Word இல் ஒரு ஆவணத்திற்கு (Document) பக்க இலக்கமிடுவதற்கு (Page number) பல முறைகள் உள்ளன. பின்வருவனவற்றுள் சரியானது?
(1) Insert Menu இல் page number ஐ click செய்தல்.
(2) File Menu இல் Pager Setup ஐ click செய்தல்.
(3) Insert Menu இல் Foot note ஐ click செய்தல்.
(4) Format Menu இல் Paragraph ஐ click செய்தல்.
(5) Insert Menu இல் Caption ஐ click செய்தல்.


58. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருள்களில் உள்ள பின்வரும் வசதிகளில் எதனை சொல்லொன்றுக்கு ஒத்த கருத்துடைய சொற்களை கண்டறியப் பயன்படுத்தலாம்? (Aug 2017)
(1) அகராதி (Dictionary) (2) நிகண்டு (Thesaurus) (3) காண் (Find)
(4) உசாத்துணைகள் (References) (5) வடிவமைப்புத் தீட்டி (Format Painter)


59. சொல் முறை வழிப்படுத்தல் மென்பொருளொன்றினது திரையில் வரைகோல் (Ruler) காட்டப்படும் இடது புறப்பகுதி உருவில் காட்டப்பட்டுள்ளது.



இங்கு  வடிவத்தில் காட்டப்பட்டிருப்பது யாது?

(1) இடது புறமாக நேர்வரிசைப்படுத்தல் (Left Align)
(2) வலதுபுறமாக நேர்வரிசைப்படுத்தல் (Right Align)
(3) தசம புள்ளிக்கு நேர்வரிசைப்படுத்தல் (Decimal Tab)
(4) படவுரு (Icon) இனது வலது புறத்தே உள்ள வரியுருவை அழித்தல்.
(5) படவுரு (Icon) இனது இடது புறத்தே உள்ள வரியுருவை அழித்தல்.

60. ஒரு வகை சொல் முறைவழிப்படுத்துதல்  மென்பொருளில் இவ் படவுரு (icon) பயன்பாடு பின்வருவனவற்றில் எது?
(1) செற்களை பக்கத்தின் இடது பக்கத்திலுருந்து வுலிந செய்து கொள்வதற்கு.
(2) செற்களை பக்கத்தின் வலது பக்கத்திலுருந்து வுலிந செய்து கொள்வதற்கு.
(3) செற்களை பக்கத்தின் நடுவில் இருந்து வுலிந செய்து கொள்வதற்கு.
(4) ஆவணத்தின் வரிகளுக்கிடையில் உள்ள இடைவெளியை அதிகரிப்பதற்கு.
(5) பந்திகளை பக்கத்தின் நடுவே சீராக அமைத்துக் கொள்வதற்கு

61. ஒரு வகை சொல் முறைவழிப்படுத்துதல் மென்பொருளில்  இவ் படவுரு (ைஉழெ) பயன்பாடு பின்வருவனவற்றில் எது?
(1) செற்களை பக்கத்தின் இடது பக்கத்திலுருந்து Type செய்து கொள்வதற்கு.
(2) செற்களை பக்கத்தின் வலது பக்கத்திலுருந்து Type செய்து கொள்வதற்கு.
(3) செற்களை பக்கத்தின் நடுவில் இருந்து Type செய்து கொள்வதற்கு.

(4) ஆவணத்தின் வரிகளுக்கிடையில் உள்ள இடைவெளியை அதிகரிப்பதற்கு.
(5) பந்திகளை பக்கத்தின் நடுவே சீராக அமைத்துக் கொள்வதற்கு

62. Ms word இல் Bold, Italic, Regular ஆகியன காணப்படுவது?
(1) Font styles இல் (2) Font effects இல் (3) Word art இல்
(4) Text effects இல் (5) Paragraph இல்

63. ஒரு வகை சொல் முறைவழிப்படுத்துதல்  மென்பொருளில் இவ் படவுரு (icon) பயன்பாடு பின்வருவனவற்றில் எது?
(1) செற்களை பக்கத்தின் இடது பக்கத்திலுருந்து Type செய்து கொள்வதற்கு.
(2) செற்களை பக்கத்தின் வலது பக்கத்திலுருந்து Type செய்து கொள்வதற்கு.
(3) செற்களை பக்கத்தின் நடுவில் இருந்து Type செய்து கொள்வதற்கு.
(4) ஆவணத்தின் வரிகளுக்கிடையில் உள்ள இடைவெளியை அதிகரிப்பதற்கு.
(5) பந்திகளை பக்கத்தின் நடுவே சீராக அமைத்துக் கொள்வதற்கு

64. ஒரு முறைவழியாக்கியில் $C_2H_4 + 3O_2 \rightarrow 2CO_2 + 2H_2O$ எனும் சமன்பாட்டை எழுதுவதற்கு பின்வருவனவற்றில் எந்தக் கட்டளையைப் (Command) பயன்படுத்த வேண்டும்?
(1) கீழொட்டு (Subscript) (2) சரிவாக்கு (Italics) (3) மேலோட்டு (Superscript)
(4) வெட்டுக்கோடிடு (Strikethrought) (5) வாசக விளைவுகள் (Text effects) (Aug 2018)

65. ஒரு வகையான சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருள் ஒன்றில் அடிமட்டம் (ruler) காணப்படாத போது அவற்றை வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் சரியான அநரெ எது?
(1) File (2) Insert (3) Font (4) View (5) Tools

66. பின்வருவனவற்றுள் ஒரு வகையான சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருள் ஒன்றில் உள்ள ஆவணத்தை முற்றாக Select செய்வதற்குப் பயன்படுத்தப்படும் Key எது?
(1) Shift + A (2) Ctrl +A (3) Alt + A (4) Del +A (5) Alt+ Ctrl + A

67. Ms word இல் spelling and grammar errors ஐ அறிவதற்கு?
(1) Press Shift + F7 (2) Press Ctrl +F7 (3) Press Alt + F7
(4) Press F7 (5) Press Alt+ Ctrl +F7

68. கமால் MS word இல் ஒரு Document ஐ உருவாக்கி Save செய்தான் எனின் பின்வருவனவற்றில் அவன் save செய்த file எதுவாக இருக்கக்கூடும்?
(1) mydocment.docx (2) kamldocumet.xlsx (3) mywork.page
(4) kamal.numb (5) document.pptx

- கீழே தரப்பட்ட வாக்கியம், சொல்முறைவழியாக்கல் மென்பொருளின் உதவியுடன் மாணவரரல் எழுதப்பட்ட ஒப்படையின் ஒரு பகுதியாகும். 67, 68 ஆகிய வினாக்கள் அதனை அடிப்படையாகக் கொண்டவை.

"National Water Supply and Drainage Board (NWS&DB) distributes drinking water. Details of activities done by NWS&DB in purification of water is given in Section 2"

69. 'Distributes' என்ற செல்லுக்கான இணைச்சொல்லைக் காண்பதற்கு எதைப் பயன்படுத்தலாம்?
(1) Spelling and Grammar (2) Translate (3) Find and Replace
(4) Format painter (5) Thesaurus (Aug 2019)

70. மாணவர் 'NWS&DB' இற்குப் பதிலாக 'NWSDB' மிகப் பொருத்தமானது எனக் கண்டுள்ளார். ஒப்படை முழுவதிலும் இத்திருத்தத்தை செய்யச் சிறந்த செயற்பாடு (function) என்ன?
(1) Change case (2) Find and Replace (3) Spelling and Grammar
(4) Sort (5) Drag and Drop (Aug 2019)

71. ஒரு வகையான சொல் முறைவழிப்படுத்துதல் மென்பொருளில் நிலைகாட்டிக்கு (cursor) இடப்பக்கத்தில் மிகக் கிட்ட இருக்கும் வரியுருவை (character) அழிப்பதற்குப் பயன்படுத்தத்தக்க சாவிப்பலகையில் உள்ள சாவி யாது? (Aug 2016)
(1) Delete (2) Space bar (3) Backspace (4) Tab (5) Enter

72. ஒரு வகையான (typical) சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளைப் பயன்படுத்தி ஓர் ஆவணத்தைத் தயாரிக்கையில் ஆவணத்தில் உள்ள ஒரு பந்தியை ஓர் இடத்திலிருந்து வேறோர் இடத்திற்குக் கொண்டுசெல்வதற்குப் (Moving ) பின்பற்ற வேண்டிய சரியான நடைமுறை?
(1) Cut, சுட்டி சுட்டுவானைத் தேவையான புதிய இடத்திற்குக் கொண்டு செல்லல், Paste
(2) Copy, சுட்டி சுட்டுவானைத் தேவையான புதிய இடத்திற்கு கொண்டு செல்லல், Paste
(3) Select, copy, சுட்டி சுட்டுவானைத் தேவையான புதிய இடத்திற்குக் கொண்டு செல்லல், Paste.
(4) Select, cut , சுட்டி சுட்டுவானைத் தேவையான புதிய இடத்திற்குக் கொண்டு செல்லல், Paste.
(5) Select, Copy , சுட்டி சுட்டுவானைத் தேவையான இடத்திற்குக் கொண்டு செல்லல், Copy
(Aug 2015)

73. ஒரு வகையான சொல் முறைவழிப்படுத்துதல் மென்பொருள் பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
(A) அது ஒரு பிரயோக மென்பொருளாகும்.
(B) அது ஆவணங்களைப் பதிப்பிப்பதற்கான ஒரு கருவியாகும்.
(C) அது ஒரு பணிசெயல் முறைமையின் கூறாகும்.
மேற்குறித்த கூற்றுகளில் உண்மையானது / உண்மையானவை எது / எவை?
(1) (A) மாத்திரம் (2) (B) மாத்திரம் (3) (c) மாத்திரம்
(4) (A),(B) ஆகியன மாத்திரம் (5) (B),(C) ஆகியன மாத்திரம் (Aug 2016)

74. வழமையான சொல் முறைவழியாக்கல் மென்பொருளில் F1 சாவி பயன்படுத்தப்படுவது,
(1) புதிய கோப்பைத் திறப்பதற்கு (to open a new file)
(2) உதவி பெறுவதற்கு (to get help)
(3) கண்டுபிடி மற்றும் மாற்றீடு சொல்லாடற் பெட்டியைத் திறப்பதற்கு (to open find and replace dialog box)
(4) எழுத்துக் கூட்டலைச் சரிபார்க்க (to check spelling)
(5) புதிய கோப்பாக சேமிக்க (to save as a new file) (Aug 2018)

75. MS PowerPoint இல் slide இல் வேலை செய்து கொண்டிருக்கும் போது இனும் ஒரு slide ஐ சேர்ப்பதற்கு பயன்படுத்தும் சரியான முறை பின்வருவனவற்றில் யாது?
(1) File, add a new slide (2) Insert, New slide (3) File, Open
(4) File, New (5) File, New presentation

76. பின்வருவனவற்றில் எந்த Format file களை MS PowerPoint நிகழ்த்துகைக்காக சேர்த்துக் கொள்ள முடியும்? (A) .jpg (B) .exe (C) .wav (D) .dmg

(1) A யும் B யும் (2) A யும் C யும் (3) B யும் D யும்
(4) A யும் D யும் (5) B யும் C யும்

77. MS Powerpoint இல் இரண்டு வகையான ஒலிகளை (Sound Effect) நிகழ்த்துகைக்காக சேர்த்துக் கொள்ள முடியும். அவையாவன?
(1) .wav files and .mid files (2) .wav files and .gif files (3) .wav files and .jpg files
(4) .jpg files and .gif files (5) .jpg files and .dmg files

78. முன்வைப்பு (Presentation) மென்பொருள்களில் ‘Rulers’,’guides’ என்பன பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
(A) rulers ஐயும் பரனைநள ஐயும் தேவைக்கேற்ப படவில்லைகளின் (slides) மீது இடுதலையும் (on) நீக்கலையும் (Off) செய்யலாம்.
(B) படவில்லைகளை அச்சிடும் போது rulers உம் guides உம் அச்சிட்ட நகல்களின் மீது தோற்றும்.
(C) படவில்லைகளின் மீது இலக்குப் பொருள்களைத் (Objects) தானப்படுத்துவதற்கு rulers உம் பரனைநள உம் உதவும்.
(D) guide கோடுகளுக்கிடையே உள்ள வெளியைத் தேவையானவாறு மாற்றமுடியாது.

இக் கூற்றுகளிடையே உண்மையானவை.
(1) (A), (B) ஆகியன மாத்திரம் (2) (A),(C) ஆகியன மாத்திரம்
(3) (B),(C) ஆகியன மாத்திரம் (4) (B), (D) ஆகியன மாத்திரம்
(5) (C),(D) ஆகியன மாத்திரம் (Aug 2015)

79. பின்வருவனவற்றில் எது பவர்பொயின்ற் (PowerPoint) இல் ஒரு காட்சி (view) அல்ல?
(1) முன்வைப்புக் காட்சி. (Presentation view)
(2) படவில்லை வரிசையாக்கிக் காட்சி. (Slide sorter view)
(3) படவில்லை காட்டற் காட்சி. (Slide show view)
(4) வாசிப்புக் காட்சி. (Reading view)
(5) சாதாரண காட்சி. (Normal view) (Aug 2018)

80. உங்களுடைய முன்வைப்பு Presentation ஒன்றினது முதற் பக்கத்திற்கு ஒரேயடியாகச் செல்வதற்கான குறுகிய வழி (Short cut) யாது?
(1) அடுத்த பக்கம் Next Page சாவியை பயன்படுத்துதல்.
(2) மேல் பக்கம் Page Up சாவியை பயன்படுத்துதல்.
(3) CTRL + Home சாவியை பயன்படுத்துதல்.
(4) Ctrl + End சாவியை பயன்படுத்துதல்.
(5) Ctrl + Page Down சாவியை பயன்படுத்துதல்.

81. வழமையான முன்வைப்பு (presentation) மென்பொருளில் CTRL + N எனும் குறுக்குவழிச் சாவி பயன்படுத்தப்படுவது,

(1) மீஇணைப்பை (Hyperlink) சேர்ப்பதற்கு.
(2) முன்வைப்பை சேமிப்பதற்கு.
(3) புதிய முன்வைப்பை உருவாக்குவதற்கு.
(4) வாக்கியம் ஒன்றைக் காண்பதற்கு.
(5) புதிய காட்சி வில்லையை (new slide) சேர்ப்பதற்கு. (Aug 2019)

82. Excel இல் எல்லா வகையான Formula களும் பின்வருவனவற்றில் எதைக் கொண்டு ஆரம்பிக்கப்படுகிறது?

(1) % (2) + (3) = (4) - (5) /

83. பின்வருவனவற்றில் எந்த Function பொதுவாக Excel இல் தற்போதய நேரத்தை (Current time) Worksheet இல் புகுத்துவதற்கு பயன்படுகிறது?
(1) = today()    (2) = now()    (3) = time()
(4) = currentTime()    (5) = if()

84. விரிதாளில் (spreadsheet) உள்ள தவறான சார்பு யாது? (Aug 2019)
(1) $= SUM(marks) - A3$    (2) $= SUM(B1:B5) - 5$    (3) $= SUM(B1:B5) * 0.5$
(4) $= SUM(B1:B5)/(5-1)$    (5) $= SUM(B1:B5) * (5-1)$

85. விரிதாள் மென்பொருளொன்றின் C10 கலத்தில் Cell உள்ள எண்ணின் 30% பெறுமானத்தை D10 கலத்தில் குறிப்பிடுவதற்காக D10 கலத்தில் இடவேண்டிய சார்பு யாது?
(1) #C10*30/100    (2) =C10*30/100    (3) =C10*100/30
(4) #C10*100/30    (5) C10*30/100

86. விரிதாள் மென்பொருளொன்றின் C5 கலத்தில் Cell = $A$1*B5 எனும் கோவை அடங்கியுள்ளதாகக் கருதுக. இக்கோவையை C கலத்தில் பிரதி செய்தால் C6 கலத்தில் அடங்கியிருக்கும் கோவை பின்வருவனவற்றுள் எது?
(1) =$A$1*B6    (2) =A1*B6    (3) =$A$1*B5    (4) =$A$1*C6    (5) =A1*B5


87. ஒரு வகையான விரிதாளின் கல முகவரி A11 இல் சூத்திரம் =$A1/$A$10 உள்ளது. இச்சூத்திரம் கல முகவரி B11 இற்கு நகல்செய்யப்படும்போது, B11 கலத்தில் உள்ள சூத்திரம்.
(1) =$A1/$A$10    (2) =$A1/$B$10    (3) =$B1/$A$10
(4) =$B1/$B$10    (5) =$B1/$A$11    (Aug 2015)

88. MS Excel இல் கூட்டல் செயற்பாட்டுக்காக பயன்படுத்தும் formula யாது?
(1) SUM    (2) IF    (3) COUND    (4) ROUND    (5) AVE

89. விரிதாள் மென்பொருளொன்றின் $C5$ கலத்தில் (Cell)$= A1 * B5$ எனும் கோவை அடங்கியுள்ளதாகக் கருதுக. இக்கோவையை $C6$ கலத்தில் பிரதி செய்தால் $C6$ கலத்தில் அடங்கியிருக்கும் கோவை பின்வருவனவற்றுள் எது?
(1) $= \$A\$1 * B6$    (2) $= A2 * B6$    (3) $= \$A\$1 * B5$    (4) $= A1 * B5$    (5) $= A1 * B6$

90. பின்வருவனவற்றில் Excel இல் இல்லாத சார்பு எது?
(1) =SUM(Sales)-A3    (2) =SUM(A1:A5)*.5    (3) =SUM(A1:A5)/(10-10)
(4) =SUM(A1:A5)-10    (5) =SUM(A1:A5)+10

91. அருகில் காட்டியவாறு ஒரு மாணவன் விரிதாளைப் பயன்படுத்தி கணித்தலை மேற்கொள்கிறான். $C1$ எனும் உநடட இல் உள்ள formula வை Copy செய்து $C2, C3$ உநடட களில் Paste செய்கிறான் எனின், $C2, C3$ களின் பெறுமானங்கள் பின்வருவனவற்றில் யாது?




(1) 48,78    (2) 78,48    (3) 23,53
(4) 53,23    (5) 0,0

92. பின்வரும் விரிதாள் பகுதியையும் A தொடக்கம் D வரையுள்ள சூத்திரங்களையும் (formulate) கருதுக.

| | A |
|---|---|
| 1 | 25 |
| 2 | 45 |
| 3 | 12 |
| 4 | 18 |

(A)=Count (A1:A4)
(B)=Sum (A1:A4)
(C)=Sum ($A$1:$A$4)
(D)=Max(A1:A4)

A1 தொடக்கம் A4 வரையுள்ள கல வீச்சில் இருக்கும் பெறுமானங்களின் கூட்டுத்தொகையைப் பெறுவதற்குக் கலத்தில் சேர்க்கப்படத்தக்க சூத்திரம் / சூத்திரங்கள்
(1) (A) மாத்திரம் (2) (B) மாத்திரம் (3) (A),(B) ஆகியன மாத்திரம்
(4) (B), (C) ஆகியன மாத்திரம் (5) (C),(D) ஆகியன மாத்திரம் (Aug 2015)

93. ஒரு வகையான விரிதாளின் கல முகவரி A11 இல் =sum (A1:A10)/$A$15 என்னும் சூத்திரம் உள்ளது. இச் சூத்திரம் கல முகவரி B11 இற்கு நகல் செய்யப்படுமெனின், கலம் B11 இற் கொள்ளப்பட்ட சூத்திரம்.
(1) =sum (A1:A10)/$A$15 (2) =sum (A1:A10)/A15 (3) =sum (B1:B10)/B15
(4) =sum (B1:B10) /$A$15 (5) =sum (B1:B10) /$B$15 (Aug 2016)

94. MS Excel இல் Cell G2 இருந்து M12 வரை உள்ள Cell களின் தொகுதியை குறிக்கும் சரியான முறை?
(1) G2.M12 (2) G2,M12 (3) G2:M12 (4) G2>M12 (5) G2;M1

95. பின்வரும் விரிதாள் கூற்றைக் கருதுக.
இங்கு B1, B2 என்னும் கல முகவரிகளில் முறையே =A1, =B1+A2 என்னும் சூத்திரங்கள் நுழைக்கப்பட்டுள்ளனவெனக் கொள்க. கல முகவரி B2 இல் உள்ள சூத்திரம் கலம் B3 இல் நகல் செய்யப்படும் போது கலம் B3 இற் காட்டப்படும் பெறுமானம் யாது? (Aug 2016)

| | A | B |
|---|---|---|
| 1 | 25 | |
| 2 | 45 | |
| 3 | 12 | |
| 4 | 18 | |

(1) 12 (2) 25 (3) 45 (4) 70 (5) 82

96. ஒரு வகை விரிதாள் மென்பொருளின் விரிதாள் படத்தில் காட்டப்பட்டுள்ளது. இவ் விரிதாளில் B நிரலில் A நிரலில் உள்ள புள்ளிகள் 50 ற்கு மேற்பட்டவை Pass எனவும் இதற்கு கீழ்ப்பட்டவை Fail எனவும் வருவதற்கான சார்பு பின்வருவனவற்றில் எது?

| | A | B |
|---|---|---|
| 1 | 45 | |
| 2 | 35 | |
| 3 | 89 | |
| 4 | 60 | |

(1) =IF(A1>50,Pass,Fail) (2) =IF(A1>50,"Pass","Fail")
(3) =IF(A1>50,"Fail","Pass") (4) IF(A1>50,"Pass","Fail")
(5) =IF(A1<50,"Pass","Fail")

97. அருகில் உளள் விரிதாளில் A1 இல் உள்ள புள்ளி 35 ஐ விட பெரிதாகக் காணப்பட்டால் S எனவும் 50 விட பெரிதாகக் காணப்பட்டால் B எனவும் 75 ஐ விட பெரிதாகக் காணப்பட்டால் A எனவும் 35 விட குறைவாகக் காணப்பட்டால் F எனவும் கலம் B1 இல் இடுவதற்கான சார்பு பின்வருவனவற்றில் எது?

| | A | B |
|---|---|---|
| 1 | 34 | |
| 2 | 37 | |
| 3 | 79 | |
| 4 | 65 | |

(1) =IF(A1<75,"A",IF(A1<50,"B",IF(A1<35,"S","F")))
(2) =IF(A1>75,"A",IF(A1>50,"B",IF(A1>35,"S","F")
(3) IF(A1>75,"A",IF(A1>50,"B",IF(A1>35,"S","F")))
(4) =IF(A1>75,"A",IF(A1>50,"B",IF(A1>35,"S","F")))
(5) =IF(A1>75,A,IF(A1>50,B,IF(A1>35,S,F)))

- வினா இலக்கங்கள் 33 உம் 34 உம் பின்வரும் விரிதாள் துண்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ளன. அதில் ஒரு பாடசாலையின் ஆண்டிறுதிப் பரீட்சையில் நான்கு மாணவர்கள் தொழினுட்பவியலிற்கான விஞ்ஞான பாடத்தில் பெற்ற புள்ளிகளும் (Marks) தொடர்புடைய தரநிலைகளும் (Grades) காட்டப்பட்டுள்ளன.

| | A | B | C |
|---|---|---|---|
| 1 | Name | Marks | Grade |
| 2 | Student 1 | 68 | B |
| 3 | Student 2 | 80 | A |
| 4 | Student 3 | 75 | A |
| 5 | Student 4 | 65 | B |
| 6 | Average | 72 | |



PREPARED BY : N.MOHANAKANTH. BSc(Phy) EUSL, PGDE, MSc (Inno Tech) UEL London. Batch 2020 Revision - VII

98. மாணவர்களின் சராசரிப் புள்ளியைப் பெறுவதற்கு B6 கலத்தில் உள்ளீடு செய்ய வேண்டிய சூத்திரம்
(1) =MEAN (B2:B5)
(2) =AVERAGE (B2:B5)
(3) =AVERAGE (B2+B3+B4+B5)
(4) =COUNT (B2+B3+B4+B5)
(5) =AVG(B2:B5)
(Aug 2018)

99. நிரல் C யிலுள்ள தரநிலையைப் (Grade) பெறுவதற்கு பயன்படுத்த வேண்டிய செயற்பாட்டுக்குறி
(1) SUM (2) COUNT (3) IF (4) MAX (5) MIN (Aug 2018)

100. அருகில் உள்ள விரிதாளில் கலம் முகவரி B1 இல் உள்ள சார்பு =ROUND($A$1,2) ஆகும். கலமுகவரி B1 ஐ உழில செய்து B5 கலமுகவரிக்கு Paste செய்த போது C5 இல் வரும் பெறுமானம் யாது?

| | A | B |
|---|---|---|
| 1 | 2.987 | 2.99 |
| 2 | 4.562 | |
| 3 | 9.987 | |
| 4 | 5.323 | |
| 5 | 6.754 | |

(1) 6.75
(2) 5.32
(3) 2.99
(4) 4.6
(5) 10

101. வட்டத்தட்டுகளின் சடத்துவத்திருப்பத்தைக் கணிப்பதற்கு பயன்படுத்தப்படும் விரிதாள் அருகில் காட்டப்பட்டுள்ளது. $C2$ உள்ளீடு செய்யப்பட வேண்டிய சூத்திரங்கள் எவை?

| | A | B | C |
|---|---|---|---|
| 1 | திணிவு (g) | ஆரை (cm) | சடத்துவத்திருப்பம் ($kgm^{-2}$) |
| 2 | 200 | 10 | 0.001 |
| 3 | 250 | 15 | |
| 4 | 300 | 20 | |
| 5 | | | |

(1) =0.5*(A2*B2*B2)/1000
(2) = 0.5*(A2*B2*B2)/10000000
(3) = (A2*B2*B2)/10000000
(4) =0.5*(A2*B2)/10000000
(5) =0.5*(A2*B2*B2)

- பின்வரும் விரிதாளின் அடிப்படையில் வினாக்கள் அமைந்துள்ளன. இது,
  (i) ஒரு சுற்றில் அழுத்த வித்தியாசம் மற்றும் தடையுடன் ஓட்டத்தின் மாறலை
  (ii) சுற்றில் 5 செக்கன்களில் பிறப்பிக்கப்பட்ட சக்தியை கணிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| 1 | அழுத்த வித்தியாசம் (வோல்ற்று) | தடை (ஓம்) | ஓட்டம் (அம்பியர்) | 5 செக்கனில் பிறப்பித்த சக்தி (யூல்) |
| 2 | 3 | 3.0 | | |
| 3 | 3 | 2.5 | | |
| 4 | 3 | 2.0 | | |
| 5 | 3 | 1.5 | | |
| 6 | 3 | 1.0 | | |
| 7 | 3 | 0.5 | | |
| 8 | 4 | 3.0 | | |
| 9 | 4 | 2.5 | | |
| 10 | 4 | 2.0 | | |
| 11 | 4 | 1.5 | | |
| 12 | 4 | 1.0 | | |
| 13 | 4 | 0.5 | | |

102. உத்தேசித்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு கலங்கள் $C2$ மற்றும் $D2$ களில் முறையே உள்ளீடு செய்யப்பட வேண்டிய சூத்திரங்கள் எவை?
(1) A2/B2 kw;Wk; (A2*A2*5)/B2
(2) A2/B2 kw;Wk; (A2*A2*5)/A2
(3) B2/A2 kw;Wk; (A2*A2*5)/A2
(4) A2/B2 kw;Wk; (A2*A2*)/C2
(5) B2/A2 kw;Wk; (A2*5)/B2
(Aug 2017)

103. குறித்ததொரு வோல்ற்றளவில், தடையுடன் ஓட்டத்தின் மாறலை குறித்துக் காட்டுவதற்கு பயன்படுத்தக்கூடிய மிகப் பொருத்தமான வரைபு வகை................ ஆகும்.
(1) சிதறல் வரிப்படம் (Scatter diagram) (2) கோட்டு வரிப்படம் (XY diagram)
(3) பை வரைபு (Pic chart) (4) வலையுருவரையம் (Histogram)
(5) சலாகை வரைபு (Bar chart) (Aug 2017)

104. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஒரு மாதகாலத்தில் தினசரி மழைவீழ்ச்சியின் மாற்றத்தை ஆய்ந்துள்ளது. பெறப்பட்ட தரவுகளின் வேறுபாடுகளைச் சித்தரிக்க மிகப் பொருத்தமான வரைபு வகை யாது?
(1) நிரல் வரைபு (Column chart) (2) கோட்டு வரைபு (Line chart)
(3) பாய்ச்சல் வரைபு (Flow chart) (4) வட்ட வரைபு (pie chart)
(5) பரப்பு வரைபு (Area chart) (Aug 2019)

105. பின்வருவனவற்றின் இணைய உலாவியாக பயன்படுத்த முடியாதவை யாது?
(1) Internet Explorer (2) Safari (3) Google chrome
(4) Mozilla Firefox (5) Acrobat Reader

106. பின்வருவனவற்றின் கல்வித்துறைசார்ந்த நிறுவனங்களுக்காக பயன்படுத்தும் தளப் பெயர் (Domain name) யாது?
(1) .0rg (2) .edu (3) .net (4) .gov (5) .Com

107. சில பிரசித்தி பெற்று இணையத்தளங்கள் பின்வருமாறு,
(A) WWW.Yahoo.com (B)WWW.apple.com
(C) WWW.google.com (D) WWW.facebook.com

இவற்றில் தேடலுக்கு (Search) பயன்படும் இணையத்தளங்கள் யாவை?
(1) A,B (2) B,C (3) B,D (4) A,B,C (5) A,C

108. இலங்கைக்கு உரியதாயிருக்கும் வலை முகவரி
(1) www.gov.cn (2) www.ausregistry.com.au (3) www.ox.ac.uk
(4) www.nic.sl (5) www.mohe.gov.lk (Aug 2018)

109. பின்வருவனவற்றில் எது IP யனனசநளள ஆக இருக்கமுடியாது?

(1) 127 . 230 . 202 . 001 (2) 191 . 123 . 109 . 101 (3) 192 . 120 . 256 . 100
(4) 223 . 100 . 103 . 201 (5) 191 . 143 . 109 . 103

110. பின்வருவனவற்றுள் எது இணையத்திற்கு நுழைவதற்காக பயன்படுத்தப் படுகின்ற இணைய உலாவி அல்லாதது?
(1) Internet Explore (2) Google Chrome (3) Prolog (4) Mozilla firefox (5) Safari

111. பின்வருவனவற்றில் இணைய வலயத்தளத்துக்கு (Internet) பயன்படுத்தாக செம்மை நடப்பு வழக்கு Protocol யாது?
A – HTTP B – DHCP C – DNS
(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும் (4) A,B,C (5) A,B மட்டும்.

112. ஒவ்வொரு நாழும் மாற்ற முடியாத IP Address பின்வருவனவற்றுள் எது?
A – Static IP address B – Dynamic IP address C – Unique IP address

(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும் (4) A,B,C (5) A,B மட்டும்.

113. blowes@sou.edu எனும் மின்னஞ்சல் முகவரியில் " sou " என்பது,
(1) Host computer in a business with the name " sou"
(2) Host computer in an educational domain.
(3) Client computer in commercial business
(4) Client computer in educational domain
(5) Host computer in commercial business

114. பின்வரும் URL களிடையே எது தொடரியல் வழுக்கள் (Syntax errors) உள்ள URL ஆகும்?
(1) http://www.google.com (2) http://190.165.21.110/login.php
(3) http://190.165.21.110/Index.html (4) http://190.165.21/Index.html
(5) http://www.youtube.com/watch?v=gFCWZLKc5Hv (Aug 2015)

115. ஒன்றுடனொன்று தொடர்புடைய வலைப்பக்கங்களின் திரட்டு.................. என அழைக்கப்படும்.
(1) வலைப்பின்னல் (network) (2) URL (3) Google
(4) வலைத்தளம் (website) (5) இணையம் (Aug 2017)

116. பின்வருவனவற்றில் இணையத்தளத்தின் முகவரியில் WWW என்பதன் விரிவு யாது?
(1) World Wide Web (2) World Wide Word (3) World Wide Wood
(4) World Word Web (5) World Web Wood

117. வலைப் பக்கங்களை உருவாக்குவதற்குப் பொதுவாக பயன்படுத்தப்படும் செய்நிரலாக்க மொழி.....
(1) ஆங்கிலம் (2) HTTP (3) HTML (4) FTP (5) URL
(Aug 2017)

118. பின்வரும் மென்பொருள்களிடையே எது வலைத் தேடல் பொறி (Web Search Engine ) ஆகும்?
(1) Internet Explorer (2) Yahoo (3) Youtube (4) Gmail (5) Twitter
(Aug 2015)

119. Internet Explorer என்பது
(1) பணிசெயல் முறைமையாகும் (2) விரிதாள் மென்பொருளாகும்
(3) வலை மேலோடியாகும் (Browser) (4) வலைத் தேடற் பொறியாகும்
(5) சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளாகும். (Aug 2016)

120. பின்வரும் மின்னஞ்சல் முறைகளில் பிழையானது?
(1) *Sman_Vithanage@example.com* (2) *Sman.Vithanage@example.com*
(3) *Sman@Vithanage@example.com* (4) "*Sman_Vithanage"@example.com*
(5) *Sman#Vithanage@example.com* (Aug 2015)

121. இணையம், உலகளாவிய வலை (WWW) என்பன பற்றிய் பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
(A) மின்னஞ்சலின் மூலம் இணையத்துடன் கொடுக்கப்படும் ஒரு கணினியைத் தனித்துவமாக இனங்காணலாம்.
(B) WWW இல் உள்ள ஓர் ஆவணத்தை ஓர் IP முகவரியைப் பயன்படுத்தி இனங்காணலாம்.
(C) WWW இல் உள்ள ஆவணங்களை வலைமேலோடியைப் பயன்படுத்திக் காணலாம்.

மேற்குறித்த கூற்றுகளில் உண்மையானது / உண்மையானவை எது / எவை?
(1) (A) மாத்திரம் (2) (B) மாத்திரம் (3) (C) மாத்திரம்
(4) (A), (B) ஆகியன மாத்திரம் (5) (B),(C) ஆகியன மாத்திரம் (Aug 2016)

122. http://190.165.16.12/index.html இன் மூலம் காட்டப்படும் URL பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

(A) 190.165.16.12 என்பது இணையத்தில் உள்ள ஒரு கணினியின் IP முகவரியாகும்.
(B) index.html என்பது கோப்பின் பெயராகும்.
(C) மேலே URL இனால் காட்டப்படும் வளத்தைக் (resource) காட்சிப்படுத்துவதற்குப் பயன்படுத்த வேண்டிய வலை மேலோடியின் பெயர் http ஆகும்.
(D) மேற்குறித்த கூற்றுகளில் உண்மையானது / உண்மையானவை எது / எவை?

(1) (A) மாத்திரம் (2) (B) மாத்திரம் (3) (C) மாத்திரம்
(4) (A), (B) ஆகியன மாத்திரம் (5) (B),(C) ஆகியன மாத்திரம் (Aug 2016)

123. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

(A) மின்னஞ்சல் (e-mail) அனுப்பும் போது 'Cc' இன் கீழ் பட்டியலிடப்பட்ட பெறுனர்களை ஏனைய சகல பெறுனர்களும் காணமுடியும். அதேநேரம் 'Bcc' இன் கீழ் பட்டியலிடப்பட்ட பெறுனர்களை ஏனைய பெறுனர்கள் காணமுடியாது.
(B) 125.214.169.218 என்பது ஒரு சரியான IP முகவரியாக இருக்கலாம்.
(C) தேடற்பொறி என்னது பயனர்கள் உலகளாவிய வலையில் (world wide web) இருக்கும் தகவல்களை கண்டுபிடிக்க உதவும் ஒரு கருவி ஆகும்.

மேலுள்ளவற்றில் சரியான கூற்று/கூற்றுகள் (Aug 2019)

(1) (A) மாத்திரம் (2) (A),(B) ஆகியன மாத்திரம் (3) (A),(C) ஆகியன மாத்திரம்
(4) (B),(C) ஆகியன மாத்திரம் (5) (A),(B),(C) ஆகிய எல்லாம்.

124. இணையத்தளம் (Internet) வலையமைப்பு (Web) என்பன தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

(A) இணையம் என்பது வலையமைப்பைக் (Web) குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மற்றுமொரு சொல்லாகும்.
(B) வலையமைப்பு (Web) என்பது IP இணைகள் (Hyperlinks) மூலம் பிரயோகிக்கத்தக்க இணையத்தில் உள்ள வளத்திரட்டின் சேர்மானமாகும்.
(C) இணையம் என்பது மீயிணைகள் (Hyperlinks) மூலம் பிரயோகிக்கத்தக்க வலையமைப்பில் (Web) உள்ள வளத்திரட்டின் சேர்மானமாகும்.
(D) இணையம் என்பது கணினி வலையமைப்புத் திரட்டுக்களாலான வலையமைப்பாகும்.

மேற்குறித்த கூற்றுகளுள் சரியான கூற்றுக்கள் எவை?

(1) (A), (B) மாத்திரம் (2) (B), (D) மாத்திரம் (3) (A), (C) மாத்திரம்
(4) (B), (C) ஆகியன மாத்திரம் (5) (C),(D) ஆகியன மாத்திரம்

125. பின்வருவனற்றுள் எது இணையப் பக்கத்தை தனித்துவமாக அடையாளப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது?

(1) வலைச்சேவையகம்
(2) IP முகவரி
(3) ஆள்களப் பெயர் (Domain Name )
(4) வலைக்கடப்பிடம் (Web site )
(5) சீரான வள இடங்கணி (URL )

126. பின்வருவனவற்றில் தேடல்பொறி (Searching Engine) இல்லாத இணையத்தளம் எது?

(1) Bing (2) Youtube (3) Yahoo (4) Google (5) MSN

127. மின்னஞ்சல் (Email) பயன்பாடுகள் பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருதுக?

(A) அனுப்பிய சகல மின்னஞ்சல்களும் பெறுநர்களுக்கு எப்போதும் வழங்கப்படுவது உத்தரவாதமானது.
(B) மின்னஞ்சலைப் பெற்ற பின்னர், அதை மின்னஞ்சற் பயனர்களுக்கு மேற்கொண்டு அனுப்பமுடியும்.
(C) மின்னஞ்சலைத் தயாரிக்கும் போது விடயக் கூட்டினை நிரப்ப வேண்டியது அவசியம்.

மேலுள்ள கூற்றுக்களில் சரியானது/சரியானவை

(1) (A) மாத்திரம் (2) (B) மாத்திரம் (3) (C) மாத்திரம்
(4) (A), (B) ஆகியன மாத்திரம் (5) (B),(C) ஆகியன மாத்திரம்

128. ஒரு மின்னஞ்சல் (Email) கணக்கிற்கு மிகவும் பொருத்தமான கடவுச் சொல் (Password),

(1) Sachiperera (2) drged#23@BLo (3) Password123
(4) Birthday0910 (5) MataraColombo (Aug 2018)

129. A, B, C எனும் மூன்று நபர்களுக்கு e-mail பின்வரும் முறைகளில் அனுப்பப்படுகிறது?

(A) TO: a@gmail.com (B) CC: b@gmail.com (C) BCC: c@hotmail.com

பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?

(1) B, C என்பவர்களுக்கு அதே email அனுப்பப்பட்டுள்ளதை A இனால் அறிய முடியும்.
(2) A , B என்பவர்களுக்கு அதே email அனுப்பப்பட்டுள்ளதை C இனால் அறிய முடியும்.
(3) C ற்கு அதே email அனுப்பப்பட்டுள்ளதை A, B என்பவர்களால் அறியமுடியாது.
(4) A ற்கு அதே email அனுப்பப்பட்டுள்ளதை B இனால் அறியமுடியும்.
(5) B ற்கு அதே email அனுப்பப்பட்டுள்ளதை A யினால் அறியமுடியாது.



PREPARED BY : N.MOHANAKANTH. BSc(Phy) EUSL, PGDE, MSc (Inno Tech) UEL London. Batch 2020 Revision - VII